[திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி] [2015 பிப்ரவரி 18 பிற்பகல் 2-55

தாயே, உழைத்துப்பார் உயரலாம், தனித்து நின்றால் துளிர்க்கலாம். முயற்சித்துப் பார் முடிக்கலாம் என்னும் நோக்கில் சிங்க நடைபோடும், மங்கையர் எல்லாம் போற்றும் மங்கா புகழ் கொண்டு, இந்நாட்டின் சிறப்புக்கு, வீரத்தை விதைத்து, அன்புக்கும், உழைப்புக்கும், இரக்கத்திற்கும் உண்மைக்கும் உயிர் கொடுத்து வரும் மாண்புமிகு அம்மா, தாங்கள் ஊக்கத்துடன் போராடும் குணத்துடன் உயரிய வழியில் வெற்றிநடை போட்டு, நாளும் வளரும் சாதனைகளின் சன்னதியான அம்மா தாங்கள். நீண்ட நெடிய காலம் செல்வ செல்வாக்குடன், சீரும் சிறப்புடன், நாளும் மின்னும் வெற்றி முகத்துடன், பெருமைமிகு வெற்றி வரலாறு படைத்திட அமைதி, வளம், வளர்ச்சி என்னும் நோக்குடன் நடைபோடும் வரலாற்றுத் தலைவி அம்மா தாங்கள். அம்மா அனைவருக்கும் அன்புகாட்டி, ஆதரவு தந்து, இரக்கம் காட்டி, ஈகைதனை ஊட்டி, உண்மையைப் பேசி, ஊக்கத்துடன் உழைப்பை உணர்த்தி, எளிமையைக் கற்றுக்கொடுத்து, ஏணி போல இருந்து அனைவரின் ஐயப்பாடுகளைத் தீர்த்து, ஒழுக்கத்தை நாளும் உணர்த்தி, ஒரு நாள், பல நாட்கள், வீர விவேகத்துடன், ஆற்றல் வல்லமையுடன், அலுக்காமல் போராடி, போராடி சாதித்த, அமைதி சொரூபமான தங்க மங்கை, மாண்புமிகு மக்களின் முதல்வர் எங்கள் அம்மா தாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பெருமைமிகு மாமன்றத்தில் இந்த எளியவனுக்கும் இனியதொரு நல்வாய்ப்புதனை வழங்கிய எனது இன்னுயிர்த் தாய்க்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-2-2015) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனைமூலம் வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (VIII) துறையின் 20-8-2014

ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 17-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. சென்னை மாநகராட்சியில் 15 வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 12-9-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 136-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான தலைவர் பதவிகளுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 12-9-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 137-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. அறிவிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளை உள்ளடக்கி முறையே (i) கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஐந்து வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்தும்; (ii) திருப்பூர் மாநகராட்சியில் நான்கு வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்தும் மற்றும் (iii) வேலூர் மாநகராட்சியில் நான்கு வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்தும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 15-9-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 140-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

5. அறிவிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளை உள்ளடக்கி முறையே (i) ஈரோடு மாநகராட்சியில் நான்கு

வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்தும் மற்றும் (ii) தூத்துக்குடி மாநகராட்சியில் நான்கு வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்தும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 19-9-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 143-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.)

6. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள வார்டுகளை உள்ளடக்கி மதுரை மாநகராட்சியில் நான்கு வார்டுகள் குழுக்களை அமைத்துருவாக்கியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 19-9-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 144-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

7. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகளில் நிலைக்குழுக்கள் அமைத்துருவாக்குதல் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும், அத்திருத்தங்களுக்குட்பட்டு மேற்சொன்ன விதிகள் (i) திருப்பூர் மாநகராட்சி; (ii) ஈரோடு மாநகராட்சி; (iii) வேலூர் மாநகராட்சி மற்றும் (iv) தூத்துக்குடி மாநகராட்சி ஆகிய மாநகராட்சிகளுக்குப் பொருந்தச் செய்வது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 4-11-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 168-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.)

8. 2013-2014 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

2015 பிப்ரவரி 18]

9. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. (1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2015 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS